# 44. புவியாரே

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

## ஆதித்தவாரம்

**ஒளியா யிருளா யிருக்குமரு ளென்னுந் திரோதை யும்முள்ளே**
**விளையு மடமை போக்கிநல்ல விவேக முதவிப் பிறவிதன்னைக்**
**களையும் படியின் பருளாகக் கருது கிறவும் முட்பதியும்**
**அளவை தானே யாதித்த வார மாகும் புவியாரே.**

ஒளியாய் இருளாய் இருக்கும் அருள் என்னும் திரோதை உம் உள்ளே
விளையும் மடமை போக்கி நல்ல விவேகம் உதவிப் பிறவி தன்னைக்
களையும்படி இன்பு அருளாகக் கருதுகிற உம் உள் பதியும்
அளவைதானே ஆதித்த வாரம்ஆகும் புவியாரே.

உலகோரே! ஒளியாகவும் இருளாகவும் இருக்கின்ற அருள் எனப்படும் திரோதான சத்தியானது, உங்கள் மனத்திலே விளையும் அறியாமையைப் போக்கி, மேலான ஞானத்தை அளித்துப் பிறப்பை நீக்கி, இன்ப அருளாகத் தியானிக்கின்ற உங்களுடைய மனத்துள்ளே பதியும் காலமே ஆதித்த வாரமாகும். (ஆதித்த வாரம் - ஞாயிற்றுக் கிழமை) 1

## சோமவாரம்

**நீரு நிழலு மொன்றாக நிகழ்தல் போலுந் தலையிருக்குஞ்**
**சூர னொளிபோ லுஞ்சுடர்செய் தூய வறிவுப் பரம்பொருளைச்**
**சேரும் பவுள்சே பவுள்சென்றார் சித்த மகத்து ளெழீஇநறும்**
**வாரங் கொளுநா ளேசோம வாரந் தேரும் புவியாரே.**

நீரும் நிழலும் ஒன்றாக நிகழ்தல் போலும் தலை இருக்கும்
சூரன் ஒளிபோலும் சுடர்செய் தூய அறிவுப் பரம்பொருளைச்
சேரும் பவுள்சே பவுள்சு என்றார் சித்தம் அகத்துள் எழீஇ நறும்
வாரம் கொளு நாளே சோமவாரம் தேரும் புவியாரே.

அறிவீர் உலகோரே! நீரும் நிழலும் ஒன்றாகக் கலந்து பிரிவின்றி இருப்பதுபோல், வானத்திலிருக்கும் சூரியன் ஒளியைப்

---

2. **சோமம்** = அமுதம், நன்மை. "ஸோமம்" வடகிளவி.

போல் ஒளிவீசும் தூய்மையான பேரறிவாக விளங்கும் பரம்பொருளை, இரண்டறக் கலந்திருக்கும் சம்பத்தே பரம சம்பத்தாகும் என்று மனத்துள்ளே நல்ல அன்பு தோன்றும் நாளே சோம வாரமாகும். (சோமவாரம் - திங்கட்கிழமை) 2

### மங்கல வாரம்

**கங்குல் பகல்க ளுள்ளடங்கக் கணிக்கு நிலைகட் கப்பாலாய்**
**எங்கு நிறைவா யுள்ளபொரு ளெங்க ளறிவுக் கறிவாயுள்**
**தங்கி நாளு முளததனைச் சாரி னிடரின் றெனவுணர்நாள்**
**மங்க லவார மாமுணர்வின் மதிக்க வுள்ள புவியாரே.**

*கங்குல் பகல்கள் உள் அடங்கக் கணிக்கும் நிலைகட்கு அப்பாலாய்*
*எங்கும் நிறைவாய் உள்ள பொருள் எங்கள் அறிவுக்கு அறிவாய் உள்*
*தங்கி நாளும் உளது அதனைச் சாரின் இடர் இன்று என உணர்நாள்*
*மங்கல வாரம் ஆம் உணர்வில் மதிக்க உள்ள புவியாரே.*

அறிவினால் மதிக்கவுள்ள உலகோரே! இரவு பகல் எனும் இவை, உள்ளடங்கக் கணிக்கப்படும் காலத்தினைக் கடந்த தாய், எங்கும் நிறைந்துள்ளதாய் இருக்கும் பரம்பொருள், எங்கள் அறிவுக்கு அறிவாய் உள்ளே தங்கி என்றும் உள்ளதாகும்; அதனைச் சேர்ந்தால் உங்களுக்குத் துன்பம் இல்லை என்று உணரும் நாளே மங்கல வாரமாகும். (மங்கல வாரம் - செவ்வாய்க்கிழமை) 3

### புந்திவாரம்

**சனிக்கு முயிரைப் புரந்தாளுந் தலைவ னாய பசுபதியை**
**மனத்து ளிருத்தி யறிந்தொன்றா மருவத் தனைமுன் கண்டன்றி**
**வனத்தின் மலையி லுறைந்தானு மொல்லா தெனவே வளர்புந்தி**
**சனிக்கு மொருநா ளேபுந்தி வாரந் தகைசால் புவியாரே.**

*சனிக்கும் உயிரைப் புரந்தாளும் தலைவன் ஆய பசுபதியை*
*மனத்துள் இருத்தி அறிந்து ஒன்றா மருவத் தனை முன் கண்டு அன்றி*
*வனத்தில் மலையில் உறைந்தானும் ஒல்லாது எனவே வளர் புத்தி*
*சனிக்கும் ஒருநாளே புந்திவாரம் தகைசால் புவியாரே.*

தகைமை சான்ற உலகோரே! பிறக்கும் உயிர்களைக் காத்து ஆட்கொள்ளும் தலைவனாகிய பசுபதியை மனத்துள் இருத்தி,

அவன் இயல்பை அறிந்து, அத்துவிதமாகக் கலந்திருக்க முன்னே கண்டாலன்றிக் காட்டிற்கும் மலைக்கும் சென்று வாழ்ந்தாலும் காணமுடியாது என்னும் விவேகம் பிறக்கும் ஒப்பற்ற நாளே புந்தி வாரமாகும். (புந்தி வாரம் - புதன் கிழமை) 4

### குருவாரம்

**சிறிது பெரிதென் றுளபேதச் செயலுஞ் சாதி குலமரபும்**
**வறிது மறதி நினைப்புமத வழக்கு மிழுக்கு மிலாதென்றும்**
**அறிவிற் கறிவா யவிரொன்றை யறிவ தற்கா வருண்மொழியொன்**
**றுறுதி யிறைவந் தருளொருநா ளுயர்கு ருவாரம் புவியாரே.**

*சிறிது பெரிது என்றுஉள பேதச் செயலும் சாதி குலமரபும்*
*வறிது மறதி நினைப்பு மதவழக்கும் இழுக்கும் இலாது என்றும்*
*அறிவிற்கு அறிவாய் அவிர் ஒன்றை அறிவதற்கா அருள் மொழி ஒன்று*
*உறுதி இறை வந்து அருள் ஒருநாள் உயர் குருவாரம் புவியாரே.*

உலகோரே! சிறியது பெரியது என்ற வேறுபாட்டுச் செயலும், சாதி, குலம், மரபு, வறுமை, மறப்பு, நினைப்பு, சமயவாதம், இழுக்கு ஆகிய இவை இல்லாமல் என்றும் அறிவுக்கு அறிவாய் விளங்கும் ஒப்பற்ற பரம்பொருளை அறிவதற்காக, ஞானமொழி ஒன்றனைச் சத்தாகவுள்ள இறைவன் குருவடிவில் வந்து உபதேசம் செய்யும் ஒரு நாளே குரு வாரமாகும். (குரு வாரம் - வியாழக்கிழமை) 5

### சுக்கிலவாரம்

**நரையுந் திரையு மிளைமூப்பு நலமும் பொலமு மில்லாமல்**
**மருவு மின்பப் பெருவாழ்வின் மன்னு வதற்கிங் கெடுத்தவுடல்**
**பிரியு முன்னங் குகனருளாற் பிறழ்சீ வனறிந் தருளுடற்குக்**
**கருவா நாள்சுக் கிலவாரங் கண்டீர் களிசால் புவியாரே.**

*நரையும் திரையும் இளை மூப்பு நலமும் பொலமும் இல்லாமல்*
*மருவும் இன்பப் பெருவாழ்வின் மன்னுவதற்கு இங்கு எடுத்த உடல்*
*பிரியும் முன்னம் குகன் அருளால் பிறழ் சீவன் அறிந்து அருள்உடற்குக்*
*கரு ஆ நாள் சுக்கில வாரம் கண்டீர் களிசால் புவியாரே.*

மகிழ்ச்சி மிக்க உலகோரே உணருங்கள்! நரையும் திரையும் இளைப்பைத் தருகின்ற முதுமையும், நன்மையும் தீமையும்

இல்லாமல் இன்பம் பொருந்திய பெருவாழ்வில் நிலைபெறுவதற்கு, எடுத்த உடலை விட்டுப் பிரியும் முன்பு குகப்பெருமானின் அருளால் விளங்கும் ஆன்மா ஞானம் பெற்று, அருள் உடம்பு கருக்கொள்ளும் நாளே சுக்கில வாரமாகும். (சுக்கில வாரம் - வெள்ளிக்கிழமை) 6

## மந்தவாரம்

**தொந்தித் தசையு நிணமுமல்கச் சோற்றான் வளருந் துளையாக்கை**
**இந்தி ரியம்பொன் மாதர்மக்க ளெனவே யோங்கி மலிபாச**
**பந்த முழுது நீத்தெம்மான் பகுக்கு மமுத வாரியுண்டு**
**மந்தங் கொண்டு மலர்ந்திடுநாண் மந்த வாரம் புவியாரே.**

*தொந்தித் தசையும் நிணமும் மல்கச் சோற்றான் வளரும் துளையாக்கை*
*இந்திரியம் பொன் மாதர் மக்கள் எனவே ஓங்கி மலிபாச*
*பந்தம் முழுதும் நீத்து எம்மான் பகுக்கும் அமுத வாரி உண்டு*
*மந்தம் கொண்டு மலர்ந்திடுநாள் மந்த வாரம் புவியாரே.*

உலகோரே! தொந்தித் தசையும், கொழுப்பும் நிரம்பச் சோற்றினால் வளரும் தொளைகளையுடைய உடம்புப் பொறிகள், பொன், மாதர், மக்கள் என்று வளர்ந்து, மிகுந்த பாசபந்தம் முழுவதையும் அறுத்து எம்பெருமான் வழங்கியருளும் அமுதக் கடலைப்பருகிச் செயலற்றுக் கிடந்து, அருள் மலர்ச்சி கொண்டு விளங்கிடும் நாளே மந்த வாரம். (மந்த வாரம் - சனிக்கிழமை) 7

## கொலைசெய்க

**விரியுந் தரணி வதிமாக்கள் விலங்கு பறவை யூர்வனநீர்**
**திரியும் பிராணி களையிம்பர்த் தீழ்ப்பா யெண்ணிக் கொலைசெய்யா**
**தரிய பேறு பெறுவதற்கா வந்தக் கரண விருத்திகளைப்**
**பிரியும் படியே கொலைசெய்யப் பெற்றி கொள்ளும் புவியாரே.**

*விரியும் தரணி வதிமாக்கள் விலங்கு பறவை ஊர்வன நீர்*
*திரியும் பிராணிகளை இம்பர்த் தீழ்ப்பாய் எண்ணிக் கொலை செய்யாது*
*அரிய பேறு பெறுவதற்கா அந்தக் கரண விருத்திகளைப்*
*பிரியும் படியே கொலை செய்யப் பெற்றிகொள்ளும் புவியாரே.*

உலகோரே! பரந்த உலகில் வாழும் மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன முதலிய பிராணிகளை இங்குத் தாழ்ந்தவைகளாய் நினைத்துக் கொலை செய்யாதீர்; பெறுதற்கு

அரிய பேறு பெறுவதற்காக மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனப்படும் அந்தக் கரணங்களின் செயல்கள் போகும்படி அவற்றைக் கொல்லும் தன்மை கொள்ளுங்கள். 8

### பொய்கூறுக

**நெய்யு மமுது முண்டுமின்னார் நேயங் கோடற் கென்றிஙனே**
**மெய்யை மெய்யா விட்டிழுக்கா மிறையார் பொய்தான் சொலலொழித்து**
**மெய்யை யறியா தவர்க்குமெய்யாய் விளங்கு முலகை யிலையென்னும்**
**பொய்யைச் சொல்லி யுய்யவன்பு பூண்டு வாரும் புவியாரே.**

*நெய்யும் அமுதும் உண்டு மின்னார் நேயம் கோடற்கு என்று இஙனே*
*மெய்யை மெய்யா விட்டு இழுக்கா மிறையார் பொய்தான் சொல் ஒழிந்து*
*மெய்யை அறியாதவர்க்கு மெய்யாய் விளங்கும் உலகை இலை என்னும்*
*பொய்யைச் சொல்லி உய்ய அன்பு பூண்டு வாரும் புவியாரே.*

உலகோரே! நெய்யும் சோறும் உண்டு பெண்களின் நட்பைப் பெறுவதற்காக உண்மையை உண்மையாகவே கைவிட்டுவிட்டு, இழிவான குற்றம் மிகுந்த பொய் சொல்வதை விடுத்து, மெய்ம்மையை அறியாதவர்க்கே மெய்யால் விளங்கும் உலகம் இல்லை என்னும் பொய்யைச் சொல்லி உய்யும் பொருட்டு அன்பு பூணுங்கள். 9

### களவுபுரிக

**உளமு முடலும் வருந்திடக்கா முற்றுத் தேடும் பிறர்பொருளைக்**
**களவு செய்தல் கறையெனவே காணற் கரிய பரவெளியில்**
**அளவு சங்கை யின்றியற்கை யமல மாக வுளபொருளை**
**உளவு கொண்டு களவுசெய்வா னுற்று வாரும் புவியாரே.**

*உளமும் உடலும் வருத்திடக் காமுற்றுத் தேடும் பிறர் பொருளைக்*
*களவு செய்தல் கறை எனவே காணற்கு அரிய பரவெளியில்*
*அளவு சங்கை இன்று இயற்கை அமலம் ஆக உள பொருளை*
*உளவு கொண்டு களவு செய்வான் உற்றுவாரும் புவியாரே.*

உலகோரே! ஆசை கொண்டு மனமும் உடம்பும் வருந்தும்படித் தேடிய பிறர் செல்வத்தைக் களவு செய்தல் குற்றமாகும்; எனவே, காணுதற்கு அரியதாயுள்ள பரவெளியில் அளவு, எண் இல்லாமல் இயற்கையாகவே பாசங்களில் இருந்து நீங்கியுள்ள பரம்பொருளை,

அதன் இரகசியத்தைக் கண்டு கொண்டு களவு செய்வதற்கு நினைத்து வாருங்கள். 10

**கள்வருந்துக**

**ஏற வளர்ந்த தாலந்தென் னீந்தின் மாந்த ரிடுவினையால்**
**ஊறுங் கள்ளைக் குடியாதுள் ளூன்றி யுணர்ந்து சத்தியமாய்**
**ஈறு முதலு நாப்பணுமின் றெங்கு நிறைவா யுளதெனநூல்**
**கூறு மின்பக் கள்ளதனைக் குடிக்க வாரும் புவியாரே.**

*ஏற வளர்ந்த தாலம் தென் ஈந்தில் மாந்தர் இடு வினையால்*
*ஊறும் கள்ளைக் குடியாது உள் ஊன்றி உணர்ந்து சத்தியமாய்*
*ஈறும் முதலு நாப்பணும் இன்று எங்கும் நிறைவாய் உளது எனநூல்*
*கூறும் இன்பக் கள் அதனைக் குடிக்க வாரும் புவியாரே.*

உலகோரே! உயரமாக வளர்ந்த பனை மரம், தென்னை மரம், ஈச்ச மரம் ஆகியவற்றில் கள் இறக்குவார் என்னும் மக்களால் பக்குவப்படுத்தப்பட்டு, நன்கு புளிப்பேறிய கள்ளைக் குடிக்காதீர்; மனத்துள் ஊன்றி உணர்ந்து மெய்ப் பொருளாய், முடிவும் முதலும் நடுவும் இல்லாததாய், எங்கும் நிறைந்துள்ளதாய் உள்ளது என ஞான நூல்கள் கூறுகின்ற இன்பமாகிய கள்ளைக் குடிக்க வாருங்கள். 11

**குருநிந்தைசெய்க**

**அருளுந் தெருளுந் தராநின்ற வையன் முருக னருண்மலிந்த**
**குருவை நிந்தை பணாதிழிவு கூறுங் கொலைகட் சூதுவஞ்சம்**
**மருளார் பொச்சாப் பழுக்காறு மற்றுங் கலுட விளைவுக்கே**
**குருவா யுளரை நிந்தித்துக் கொள்ள வாரும் புவியாரே.**

*அருளும் தெருளும் தராநின்ற ஐயன் முருகன் அருள் மலிந்த*
*குருவை நிந்தை பணாது இழிவு கூறும் கொலை கள் சூது வஞ்சம்*
*மருளார் பொச்சாப்பு அழுக்காறு மற்றும் கலுட விளைவுக்கே*
*குருவாய் உளரை நிந்தித்துக் கொள்ளவாரும் புவியாரே.*

---

**12. கலுடம்** = பாவம்.

8 – முதல் 12 – வரையிலுமுள்ள பாட்டுக்களில் கொலை, பொய், களவு, கள், குருநிந்தை யென்னும் ஐந்து மாபாதகங்களையும் அறக் களைதலும், அவ்வைந்திற்கும் வேறுபொருள் நயம் பிறங்க வுரைத்து அவை கோடற்பாலனவெனக் கூறலும் இங்குக் கண்டாமன்றே. ஏனையவும் இன்னனவாமே

உலகோரே! அருளும் அறிவும் அளித்தருளும் ஐயனாகிய முருகனின் திருவருளை நிந்திக்காதீர்; இழிவாகக் கூறப்படும் கொலை, கள், சூது, வஞ்சனை, அறியாமை நிறைந்த மறதி, பொறாமை மற்றும் பாவச் செயல்கள் ஆகியவற்றின் குருவாயுள்ளவரை நிந்திக்க வாருங்கள்! 12

### கொள்ளை

**கள்ளில் வேத நெறிதுறந்து காமஞ் சீற்ற மீயாமை**
**எள்ளு மிடம்ப மதந்துவேஷ மிழிவா மோக மென்பவற்றைக்**
**கொள்ளை கொள்ள வேண்டாநீர் குறையா நிறைவா யனாமயமாய்**
**உள்ள பொருளைக் கொள்ளைகொளற் கோடி வாரும் புவியாரே.**

*கள்ளில் வேதநெறி துறந்து காமம் சீற்றம் ஈயாமை*
*எள்ளும் இடம்பம் மதம் துவேஷம் இழிவாம் மோகம் என்பவற்றைக்*
*கொள்ளை கொள்ள வேண்டாநீர் குறையா நிறைவாய் அனாமயமாய்*
*உள்ள பொருளைக் கொள்ளை கொளற்கு ஓடிவாரும் புவியாரே.*

உலகோரே! கள்ளமற்ற வேத நெறியை விட்டுக் காமம், கோபம், உலோபம், எள்ளுகின்ற இடம்பம், மதத் துவேஷம், இழிவான மோகம் என்னும் தீய குணங்களை நீங்கள் கொள்ளை கொள்ள வேண்டா; குறைவில்லாத நிறைவாயும், நோயற்றதாயும் உள்ள பரம்பொருளைக் கொள்ளை கொள்வதற்கு ஓடிவாருங்கள்! 13

### சுத்தவீரம்

**வாழு நாக வமரர்பிரான் வகுத்த வழியி னில்லாநீர்**
**தாழல் போல்வன் சீற்றநேரிற் றம்மை மாய்க்க வுடனிருக்கும்**
**பாழி மனதை யடக்காது பயிலும் வீரம் வீரமன்று**
**சூழு மதனை யடக்கிநிற்றல் சுத்த வீரம் புவியாரே.**

*வாழும் நாக அமரர் பிரான் வகுத்த வழியில் நில்லாநீர்*
*தாழல் போல்வன் சீற்றம் நேரில் தம்மை மாய்க்க உடன் இருக்கும்*
*பாழி மனதை அடக்காது பயிலும் வீரம் வீரம் அன்று*
*சூழும் அதனை அடக்கி நிற்றல் சுத்த வீரம் புவியாரே.*

---

**14.** "வன்சீற்ற நேரிற்றம்மை மாய்க்க தாழல்போலுடனிருக்கும்" என வியைத்துக் கொள்க. தாழ் அல்போல் = தாழ்ந்த இருளைப் போல்.

உலகோரே! வானுலகில் வாழும் தேவர்களின் தெய்வமான முருகன் வகுத்த வழியில் நில்லாத நீங்கள், வலிமையான கோபம் தோன்றினால், தம்மைக் கொல்லுவதற்குத் தாழ்ந்த இருள் போல் உடனிருக்கும் வலிய மனத்தை அடக்காமல், இதற்கு வேறாகப் பழகும் வீரம் உண்மையான வீரம் இல்லை; உங்களைச் சூழ்ந்துள்ள மனத்தை அடக்குவதே சுத்த வீரமாகும். 14

### சம்பிரதாயம்

**நினையு நினைவிற் கெட்டாம னிற்கு முருகோ னெனும்பொருளைத்**
**தினமு நினையோர் சாதனையாற் றேகம் விடுமவ் வேளையினும்**
**மனைவி மகார்மண் மாசைநசை மருவா மௌனம் பூட்டுகின்ற**
**மனநி ரோதஞ் சம்ப்ரதாய மற்றொன் றில்லை புவியாரே.**

*நினையும் நினைவிற்கு எட்டாமல் நிற்கும் முருகோன் எனும் பொருளைத்*
*தினமும் நினை ஓர் சாதனையால் தேகம் விடும் அவ்வேளையினும்*
*மனைவி மகார் மண் மாசை நசை மருவா மௌனம் பூட்டுகின்ற*
*மனநிரோதம் சம்ப்ரதாயம் மற்றொன்றுஇல்லை புவியாரே.*

உலகோரே! நினைக்கும் நினைவிற்கு எட்டாமல் நிற்கும் முருகப்பெருமான் என்னும் பரம்பொருளைத் தினமும் நினைக்கின்ற ஒரு சாதனையில், இவ்வுடம்பை விடுகின்ற அந்த நேரத்தில் மனைவி, மக்கள், பொன் முதலிய ஆசைகள் கூடாதபடி மௌனம் பூட்டுகின்ற மன அழிவே சம்பிரதாயமாகும்; அதுவன்றி வேறொன்றில்லை. 15

### உத்தியோகம்

**உடையு நடையுங் குடையுங்கொண் டுல்லா சப்பேய் நனியாட்டத்**
**தடையில் லாநும் முத்யோகந் தடுக்க மாட்டா தெமபடரைக்**
**கடையு முதலு நாப்பண்ணுங் காணாப் பொருளெங் கண்மணியை**
**அடையப் பார்க்கு முத்யோக வாற்ற றடுக்கும் புவியாரே.**

---

**15. மாசை** = பொன்; **சூ – நிகண்டு** காண்க.

**சம்ப்ரதாயம்** = மறைத்து மொழிகிளவி; வடநூன்முடிபு.

**16. உத்யோகம் –** வடநூன் முடிபு.

உடையும் நடையும் குடையும் கொண்டு உல்லாசப் பேய் நனிஆட்டத்
தடை இல்லா நும் உத்யோகம் தடுக்கமாட்டாது எமபடரைக்
கடையும் முதலும் நாப்பண்ணும் காணாப் பொருள்எம் கண்மணியை
அடையப் பார்க்கும் உத்யோகம் ஆற்றல் தடுக்கும் புவியாரே.

உலகோரே! உடை, நடை, குடை ஆகியவற்றைக் கொண்டு உல்லாசம் என்னும் பேய் உங்களை நன்றாக ஆட்டுவிக்க, எவ்வித இடையூறுமில்லாமல் நீங்கள் செய்கின்ற உத்தியோகம் ஆனது, இயமனுடைய தூதர்கள் உங்கள் உயிரைப் பிடிக்க வரும்போது தடுக்கமாட்டாது; முதல், நடு, இறுதி இல்லாத பரம்பொருளாகிய எம் கண்மணியை அடையப் பார்க்கும் உத்தியோக ஆற்றல், அந்த இயமன் தூதர்களைத் தடுத்து விடும். ஆதலால் உலக வாழ்விற் செய்யும் உத்தியோகத்தையே பெரிதாகக் கருதி உல்லாசமாகத் திரியாமல், இறைவனை அடையும் உத்தியோகத்தைப் பெரிதாகக் கருதவேண்டும் என்பது கருத்து. 16

## காயகற்பம்

**விவேக மின்றி நெடுநாளிவ் விபுலை தன்னி லிருப்பதனால்**
**அவமே யன்றிச் சுகமில்லை யாத றொட்டா யுளுக்காக**
**உவகை யுற்றுக் காயகற்ப முண்டிங் குழன்று கெடாமலலை**
**கவலை மனத்தைக் குளிரவைத்தல் காய கற்பம் புவியாரே.**

விவேகம் இன்றி நெடுநாள் இவ்விபுலை தன்னில் இருப்பதனால்
அவமே அன்றிச் சுகம் இல்லை ஆதல் தொட்டு ஆயுளுக்காக
உவகை உற்றுக் காய கற்பம் உண்டு இங்கு உழன்று கெடாமல் அலை
கவலை மனத்தைக் குளிர வைத்தல் காயகற்பம் புவியாரே.

உலகோரே! பதிஞானத்தை அடையாமல் நீண்ட காலம் இவ்வுலகில் வாழ்ந்திருப்பதால் துன்பமேயின்றி இன்பம் இல்லை; ஆதலால், நீண்ட ஆயுளுக்காக மகிழ்ச்சி கொண்டு காயகல்பத்தை உண்டு இங்கு வருத்திக் கெட்டுப் போகாமல், அலைந்து கவலைப்படும் மனத்தைக் குளிர வைத்தலே காயகற்பமாகும். 17

## சித்தி

**மாய வித்தை யாஞ்சித்து வகைக ளானே தனையறிந்து**
**ஞேய முத்தி யடையொண்ணா நிகழ்நற் குசல ரவைவிரும்பார்**
**தூய ஞான முடையவரைத் தொடர்ந்து நிற்குஞ் சித்தியெலாம்**
**காயம் விடுமுன் சிவஞானங் கருது மதனாற் புவியாரே.**

*மாய வித்தையாம் சித்து வகைகளானே தனை அறிந்து*
*ஞேய முத்தி அடை ஒண்ணா நிகழ் நற்குசலர் அவை விரும்பார்*
*தூய ஞானம் உடையவரைத் தொடர்ந்து நிற்கும் சித்தி எலாம்*
*காயம் விடும் முன் சிவஞானம் கருதும் அதனால் புவியாரே.*

உலகோரே! மாய வித்தையான சித்துவகையால் தன்னை அறிந்து கொண்டு பரமுத்தியை அடையமுடியாது; ஆதலால், அவற்றை அறிஞர் விரும்பார்; தூய்மையான பதிஞானத்தைப் பெற்ற ஞானிகளை அச்சித்திகள் எல்லாம் அவருடைய ஏவல் கேட்டு நிற்கும்; ஆதலால், நீங்கள் இத்தூல உடம்பை விடுமுன்னர் சிவஞானத்தைப் பெறுவதற்கு நினையுங்கள். 18

## நல்லநாள்

**வாதின் மூத்து வழக்கிடற்கே மதங்கொண் டடங்கா மதமுடையோர்**
**ஏது முடிவு கண்டாரிங் கீசன் றன்னை யிறைஞ்சினிய**
**போத முடையா ரெல்லாரும் புனித மூர்த்தி யாவரெனா**
**நாதன் பரிவைத் தெளிநாளே நல்ல நாணற் புவியாரே.**

*வாதின் மூத்து வழக்கு இடற்கே மதம் கொண்டு அடங்கா மதம் உடையோர்*
*ஏது முடிவு கண்டார் இங்கு ஈசன் தன்னை இறைஞ்சு இனிய*
*போதம் உடையார் எல்லாரும் புனித மூர்த்தி ஆவர் எனா*
*நாதன் பரிவைத் தெளிநாளே நல்லநாள் நல்புவியாரே.*

நல்ல உலகோரே! வீண்வாதம் செய்வதிலே முதிர்ந்து, வழக்குத் தொடுப்பதற்கே ஓடி, மதத்தைக் கொண்டு சிறிதும் அடங்காத செருக்குடையவர் இங்கு இறுதியில் என்ன முடிவைக் கண்டார்கள்? இறைவனைத் தொழுகின்ற இனிய அறிவுடையார் எல்லாரும் புண்ணிய மூர்த்திகள் ஆவர் என்று நாதன் கருணையை அறியும் நாளே நல்ல நாளாகும். 19

18. தொடர்ந்துநிற்கு மென்றதற்கு ஏவலுக் கெதிர்பார்த்து நிற்குமெனப் பொருளறிக. சித்தியெலாமென்றதனால் அணிமாதி அஷ்டசித்தியுங் கொள்ளலாம்.

**பண்டிகைநாள்**

**எஞ்சா வருணைப் பதியிருந்த வெந்தை யருண கிரிக்கன்றால்**
**அஞ்சே லஞ்சே லெனுமபய மளித்த வேலிற் கிறைவனடிக்**
**கஞ்சந் தன்னை நினையாநாள் கசட்டு நாளந் நாளதனைப்**
**பஞ்ச மாக்கிக் கண்டவெல்பண் டிகைநாள் பரிவுப் புவியாரே.**

எஞ்சா அருணைப் பதி இருந்த எந்தை அருணகிரிக்கு அன்று ஆல்
அஞ்சேல் அஞ்சேல் எனும் அபயம் அளித்த வேலிற்கு இறைவன் அடிக்
கஞ்சம் தன்னை நினையாநாள் கசட்டுநாள் அந்நாள் அதனைப்
பஞ்சம் ஆக்கிக் கண்ட எல் பண்டிகைநாள் பரிவுப் புவியாரே.

அன்புள்ள உலகோரே! அழியாத திருவண்ணாமலைத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள எம்முடைய தந்தையான அருணகிரிநாதருக்கு அன்று அஞ்சேல்! அஞ்சேல்! எனும் அபயம் அளித்தருளிய வேலிறைவனுடைய திருவடித் தாமரை மலரை நினையாத நாள் குற்றமான நாளாகும்! அத்தகைய நாட்களை இல்லாமற் செய்து, நினைக்கும் நாளாகச் செய்யும் நாட்கள் எல்லாம் பண்டிகை நாட்கள் ஆகும்! 20